**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**
**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**
**மோ.வா.வி.கோ.மனு எண். 82 /2020**

பெயர் – தங்கமணி ம.சா.1

த/பெ –

கிராமம் –

தாலுகா –

தொழில் –

ஜாதி –

மதம் –

வயது –

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2023ம் ஆண்டு மார்ச் திங்கள் 03ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. சாட்சி வயோதிகம் உடல் நிலை காரணமாக சாட்சி கூண்டில் ஏற முடியவில்லை. தனியாக இருக்கையில் அமர்த்தி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை : –**

நான் இந்த மனுவில் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண உறுதி கூற்றாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் எனது அறிவுரையின் பேரில் அது தயார் செய்யப்பட்டது.

1. பணகுடி காவல் நிலைய குற்ற எண். 220/2020 முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1.**

2. பார்வை மகஜர் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2**

3. மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3.**

4. TN 72 BX 9847 என்ற ஸ்கூட்டி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4.**

5. குற்ற அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5.**

6. காயச்சான்று **ம.சா.ஆ.6**

7. வள்ளியூர் பாலாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் ஏற்பட்ட செலவினங்களுக்கான ரசீது ரூ.**1,24,920/–**

A BARSAD BEGUM

Digitally signed by A BARSAD BEGUM
Date: 2023.03.03 18:48:14 +0530

க்குரியது **ம.சா.ஆ.7.** (ஆவணத்தின் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடிது என ஆட்சேபிக்கப்பட்டு ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

8. வள்ளியூர் பாலாஜி மருத்துவமனை விடுவிப்பு சான்று **ம.சா.ஆ.8.**

9. நாகர்கோவில் குமார் எலும்பு முறிவு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் ஏற்பட்ட செலவினங்களுக்கான ரசீது ரூ.**26,700/–**க்குரியது **ம.சா.ஆ.9.** (ஆவணத்தின் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடிது என ஆட்சேபிக்கப்பட்டு ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

10. நாகர்கோவில் குமார் எலும்பு முறிவு மருத்துவமனை விடுவிப்பு சான்று **ம.சா.ஆ.10.**

11. நாகர்கோவில் குமார் எலும்பு முறிவு மருத்துவமனை மற்றும் வள்ளியூர் பாலாஜி மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் ஏற்பட்ட செலவினங்களுக்கான ரசீது ரூ.26,302/–க்குரியது **ம.சா.ஆ.11.** (ஆவணத்தின் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடிது என ஆட்சேபிக்கப்பட்டு ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

12. எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா.ஆ.12.**

13. எனது வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா.ஆ.13.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

எனது வயது, வருமானம் வேலையை காட்டும ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நான் ரோட்டை கடக்கும் போது தான் இந்த விபத்து என்றால் சரிதான். விபத்துக்கு என்னுடைய கவனக்குறைவு தான் காரணம் என்றும் 1ம் எதிர்மனுதார் கவனமாக தான் வந்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவமனை பில்கள் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னால் வேலைக்கு செல்ல முடியவில்லை. எனக்கு ஏற்படட காயங்கள்

A BARSAD BEGUM
Digitally signed by A BARSAD BEGUM
Date: 2023.03.03 18:48:19 +0530

குணமாகிவிட்டது என்றால் சரியல்ல வலி உள்ளது. நான் கோரிய இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல. விபத்துக்கு எனது கவனக்குறைவு தான் காரணம் என்பதால் நான் கேட்டுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை –</u> இல்லை

A BARSAD BEGUM

Digitally signed by A BARSAD BEGUM
Date: 2023.03.03 18:48:24 +0530